மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தான்குளம்

முன்னிலை திருமதி.M.சிவராஜேஷ், B.B.A.,L.L.B.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தான்குளம்

2025 ம் ஆண்டு ஜுன் 26 ஆம் நாள் வியாழக்கிழமை

இ.ம.எண்.63/2025

in

அ.வ எண்.26/2023

பரமசிவன் ........... மனுதாரர்/வாதி

/ எதிர் /

1. இசக்கியம்மாள் ............ எதிர்மனுதாரர்/பிரதிவாதி

2. தங்கத்தாய் ............ எதிர்மனுதாரர்/புதிதாக 2 ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்கப்பட வேண்டிய நபர்

இம்மனுவானது 24.06.2025 அன்று இறுதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.பாலகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.டால்பின்ராஜ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், மனு மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

உத்தரவு

இம்மனுவானது இந்த மனுவில் கண்ட விபரப்படி பிராதை சீர்திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் ஆர்டர் 6 ரூல் 17-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரரின் மனுவின் சுருக்கம்**:

மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும்போது எதிர்மனுதாரர்/பிரதிவாதி பிராது தபசில் சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து தபசில் சொத்தில் நான் நட்டு வைத்திருந்த 100 வாழை கன்றுகளை பிடுங்கி போட்டு அழிமதி ஏற்படுத்திவிட்டார். அதன் மதிப்பு சுமார் ரூ.30,000/- இருக்கும். மேற்படி விபரம் தொடர்பாக பிராதை சீர்திருத்தம் செய்ய கேட்டு நான் தாக்கல் செய்த மனுவானது இ.ம.எண்.180/2024 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு கடந்த 09.11.2024 அன்று சமூகம் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் வழக்கு நிலுவையில் இருக்கும் போது 1ம் எதிர்மனுதாரர் தனது மகளான 2ம் எதிர்மனுதாரருக்கு வழக்கு சொத்தை கடந்த 28.03.2024 தேதியில் சாத்தான்குளம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்: 701/2024-ன்படி கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி விபரம்

SIVA RAJESH M
Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.06.26 05:33:44 +0530

அறிந்த நான் 2ம் எதிர்மனுதாரரை தாவா வழக்கில் கட்சியாக சேர்த்து வழக்கை நடத்த அனுமதிக்க கேட்டு மனு தாக்கல் செய்திருந்தேன். மேற்படி மனு இ.ம.எண்: 255/2024 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு கடந்த 19.08.2024 அன்று சமூகம் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த மனுவில் கண்ட விபரப்படி பிராதை சீர்திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டியுள்ளது. அல்லாத பட்சம் மனுதாரர்/வாதியாகிய எனக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும் என மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் எதிருரை இல்லை என்றும் நீதிமன்றம் நீதியின்பால் முடிவு செய்யலாம் என்று மேலெழுத்து செய்யப்பட்டது

4. இம்மனுவில் தீர்மானிக்கபடவேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரரின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

5. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சியம், சான்றாவணங்கள் இல்லை.

6. தீர்வு:

இம்மனுவானது இந்த மனுவில் கண்ட விபரப்படி பிராதை சீர்திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும்போது எதிர்மனுதாரர்/பிரதிவாதி பிராது தபசில் சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து தபசில் சொத்தில் நான் நட்டு வைத்திருந்த 100 வாழை கன்றுகளை பிடுங்கி போட்டு அழிமதி ஏற்படுத்திவிட்டார் என்றும், அதன் மதிப்பு சுமார் ரூ.30,000/- இருக்கும் என்றும், மேற்படி விபரம் தொடர்பாக பிராதை சீர்திருத்தம் செய்ய கேட்டு நான் தாக்கல் செய்த மனுவானது இ.ம.எண்.180/2024 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு கடந்த 09.11.2024 அன்று சமூகம் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் வழக்கு நிலுவையில் இருக்கும் போது 1ம் எதிர்மனுதாரர் தனது மகளான 2ம் எதிர்மனுதாரருக்கு வழக்கு சொத்தை கடந்த 28.03.2024 தேதியில் சாத்தான்குளம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்: 701/2024-ன்படி கிரையம் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி விபரம் அறிந்த நான் 2ம் எதிர்மனுதாரரை தாவா வழக்கில் கட்சியாக சேர்த்து வழக்கை நடத்த அனுமதிக்க கேட்டு மனு தாக்கல் செய்திருந்தேன் என்றும், மேற்படி மனு இ.ம.எண்: 255/2024 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு கடந்த 19.08.2024 அன்று சமூகம் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே இந்த மனுவில் கண்ட விபரப்படி பிராதை சீர்திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டியுள்ளது என்றும், அல்லாத பட்சம் மனுதாரர்/வாதியாகிய எனக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும் என்று கூறியுள்ளதை கருத்தில் கொண்டும், மேற்கூறிய திருத்தங்கள் எவ்வகையிலும் வழக்கின் இயல்பை மாற்றாது என்பதை கருத்தில் கொண்டும், இரு தரப்பினருக்கும் தங்களது வழக்கினை நிரூபிக்க ஒரு வாய்ப்புகொடுக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும் நீதியின்

SIVA RAJESH M
Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.06.26 05:33:52 +0530

நலனை கருத்தில் கொண்டும், மனுதாரரின் மனுவை அனுமதிப்பது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக,**

**இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ம் ஆண்டு ஜுன் மாதம் 26 ம் நாள் வியாழக்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SIVA RAJESH M
Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.06.26 05:33:58 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சாத்தான்குளம்.

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் - இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் - இல்லை

SIVA RAJESH M
Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.06.26 05:34:03 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சாத்தான்குளம்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

சாத்தான்குளம்.

இ.ம.எண்63/2025 இன்

அ.வ.எண்.26/2023

நேரிய/வரைவு உத்தரவு

நாள். 26.06.2025